ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்கோவலூர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்கோவலூர்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ॥ **1.1.12** ॥

## பெரிய திருமொழி – அன்றாயர்

‡ அன்றாயர் குலக் கொடியோடு ⋆
அணி மா மலர் மங்கையொடன்பளவி ⋆
அவுணர்க்கென்றானும் இரக்கம் இலாதவனுக்கு ⋆
உறையும் இடம் ஆவது ⋆
இரும் பொழில் சூழ் நன்றாய புனல் நறையூர் திருவாலி குடந்தை ⋆
தடம் திகழ் கோவல் நகர் ⋆
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ॥ **2.4.1** ॥

## பெரிய திருமொழி – மஞ்சாடு

‡ மஞ்சாடு வரை ஏழும் கடல்கள் ஏழும் ⋆
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம் ⋆
எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின் மேல் ஓர் ⋆
இளந் தளிரில் கண்வளர்ந்த ஈசன் தன்னை ⋆
துஞ்சா நீர் வளம் சுரக்கும் பெண்ணைத் தென் பால் ⋆
தூய நான்மறையாளர் சோமுச் செய்ய ⋆

செஞ்சாலி விளை வயலுள் திகழ்ந்து தோன்றும் ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.1** ॥

கொந்தலர்ந்த நறுந் துழாய் சாந்தம் தூபம் ⋆
தீபம் கொண்டமரர் தொழப் பணம் கொள் பாம்பில் ⋆
சந்தணி மென் முலை மலராள் தரணி மங்கை ⋆
தாம் இருவர் அடி வருடும் தன்மையானை ⋆
வந்தனை செய்திசை ஏழ் ஆறங்கம் ⋆
ஐந்து வளர் வேள்வி நான்மறைகள் மூன்று தீயும் ⋆
சிந்தனை செய்திரு பொழுதும் ஒன்றும் ⋆
செல்வத் திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.2** ॥

கொழுந்தலரும் மலர்ச் சோலைக் குழாங்கொள் பொய்கைக் ⋆
கோள் முதலை வாள் எயிற்றுக் கொண்டற்கெள்கி ⋆
அழுந்திய மா களிற்றினுக்கன்றாழி ஏந்தி ⋆
அந்தரமே வரத் தோன்றி அருள் செய்தானை ⋆
எழுந்த மலர்க் கரு நீலம் இருந்தில் காட்ட ⋆
இரும் புன்னை முத்தரும்பிச் செம் பொன் காட்ட ⋆
செழுந்தட நீர்க் கமலம் தீவிகை போல் காட்டும் ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.3** ॥

தாங்கரும் போர் மாலி படப் பறவை ஊர்ந்து ⋆
தராதலத்தோர் குறை முடித்த தன்மையானை ⋆
ஆங்கரும்பிக் கண் நீர் சோர்ந்தன்பு கூரும் ⋆
அடியவர்கட்கார் அமுதம் ஆனான் தன்னை ⋆
கோங்கரும்பு சுர புன்னை குரவார் சோலைக் ⋆
குழா வரி வண்டிசை பாடும் பாடல் கேட்டு ⋆

தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.4** ॥

கறை வளர் வேல் கரன் முதலாக் கவந்தன் வாலி ⋆
கணை ஒன்றினால் மடிய இலங்கை தன்னுள் ⋆
பிறை எயிற்று வாள் அரக்கர் சேனை எல்லாம் ⋆
பெருந் தகையோடுடன் துணித்த பெம்மான் தன்னை ⋆
மறை வளரப் புகழ் வளர மாடம் தோறும் ⋆
மண்டபம் ஒண் தொளி அனைத்தும் வாரம் ஓத ⋆
சிறை அணைந்த பொழில் அணைந்த தென்றல் வீசும் ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.5** ॥

உறி ஆர்ந்த நறு வெண்ணெய் ஒளியால் சென்று ⋆
அங்குண்டானைக் கண்டாய்ச்சி உரலோடார்க்க ⋆
தறி ஆர்ந்த கருங்களிறே போல நின்று ⋆
தடங்கண்கள் பனி மல்கும் தன்மையானை ⋆
வெறி ஆர்ந்த மலர் மகள் நா மங்கையோடு ⋆
வியன் கலை எண் தோளினாள் விளங்கு ⋆
செல்வச் செறியார்ந்த மணி மாடம் திகழ்ந்து தோன்றும் ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.6** ॥

இருங்கைம் மா கரி முனிந்து பரியைக் கீறி ⋆
இன விடைகள் ஏழ் அடர்த்து மருதம் சாய்த்து ⋆
வரும் சகடம் இற உதைத்து மல்லை அட்டு ⋆
வஞ்சம் செய் கஞ்சனுக்கு நஞ்சானானை ⋆
கரும் கமுகு பசும் பாளை வெண் முத்தீன்று ⋆
காய் எல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்ட ⋆

செருந்தி மிக மொட்டலர்த்தும் தேன் கொள் சோலைத் ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.7** ॥

பாரேறு பெரும் பாரம் தீரப் ⋆
பண்டு பாரதத்துத் தூதியங்கி ⋆
பார்த்தன் செல்வத் தேர் ஏறு சாரதி ஆய் எதிர்ந்தார் சேனை ⋆
செருக்களத்துத் திறல் அழியச் செற்றான் தன்னை ⋆
போர் ஏறொன்றுடையானும் அளகைக் கோனும் ⋆
புரந்தரனும் நான்முகனும் பொருந்தும் ஊர் போல் ⋆
சீர் ஏறு மறையாளர் நிறைந்த ⋆
செல்வத் திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.8** ॥

தூ வடிவின் பார் மகள் பூ மங்கையோடு ⋆
சுடர் ஆழி சங்கிரு பால் பொலிந்து தோன்ற ⋆
காவடிவின் கற்பகமே போல நின்று ⋆
கலந்தவர்கட்கருள் புரியும் கருத்தினானை ⋆
சேவடி கை திருவாய் கண் சிவந்த ஆடை ⋆
செம் பொன் செய் திரு உருவம் ஆனான் தன்னை ⋆
தீ வடிவின் சிவன் அயனே போல்வார் மன்னு ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.9** ॥

‡ வாரணம் கொள் இடர் கடிந்த மாலை ⋆
நீல மரதகத்தை மழை முகிலே போல்வான் தன்னை ⋆
சீர் அணங்கு மறையாளர் நிறைந்த ⋆
செல்வத் திருக்கோவலூர் அதனுள் கண்டேன் என்று ⋆
வார் அணங்கு முலை மடவார் மங்கை வேந்தன் ⋆
வாள் கலியன் ஒலி ஐந்தும் ஐந்தும் வல்லார் ⋆

காரணங்களால் உலகம் கலந்தங்கேத்தக் ⋆
கரந்தெங்கும் பரந்தானைக் காண்பர் தாமே ॥ **2.10.10** ॥

## பெரிய திருமொழி – சினவில்

தாய் நினைந்த கன்றே ஒக்க ⋆
என்னையும் தன்னையே நினைக்கச் செய்து ⋆
தான் எனக்காய் நினைந்தருள் செய்யும் அப்பனை ⋆
அன்றிவ் வையகம் உண்டுமிழ்ந்திட்ட வாயனை ⋆
மகரக் குழைக் காதனை ⋆
மைந்தனை மதிட் கோவல் இடை கழி ஆயனை ⋆
அமரர்க்கரி ஏற்றை ⋆
என் அன்பனை அன்றி ஆதரியேனே ॥ **7.3.2** ॥

## பெரிய திருமொழி – பெரும்புறக்கடலை

பேய் முலைத் தலை நஞ்சுண்ட பிள்ளையைத் ⋆
தெள்ளியார் வணங்கப்படும் தேவனை ⋆
மாயனை மதிள் கோவல் இடைகழி மைந்தனை ⋆
அன்றி அந்தணர் சிந்தையுள் ஈசனை ⋆
இலங்கும் சுடர்ச் சோதியை ⋆
எந்தையை எனக்கெய்ப்பினில் வைப்பினை ⋆
காசினை மணியைச் சென்று நாடிக் ⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே ॥ **7.10.4** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

அலம் புரிந்த நெடுந் தடக்கை அமரர் வேந்தன் ⋆
அஞ்சிறைப் புள் தனிப் பாகன் அவுணர்க்கென்றும் ⋆
சலம் புரிந்தங்கருள் இல்லாத் தன்மை யாளன் ⋆

தான் உகந்த ஊர் எல்லாம் தன் தாள் பாடி ⋆
நிலம் பரந்து வரும் கலுழிப் பெண்ணை ஈர்த்த ⋆
நெடு வேய்கள் படு முத்தம் உந்த உந்தி ⋆
புலம் பரந்து பொன் விளைக்கும் பொய்கை வேலிப் ⋆
பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே ! ॥ **6** ॥

வற்புடைய வரை நெடுந் தோள் மன்னர் மாள ⋆
வடி வாய மழுவேந்தி உலகம் ஆண்டு ⋆
வெற்புடைய நெடுங்கடலுள் தனி வேல் உய்த்த ⋆
வேள் முதலா வென்றான் ஊர் விந்தம் மேய ⋆
கற்புடைய மடக் கன்னி காவல் பூண்ட ⋆
கடி பொழில் சூழ் நெடு மறுகில் கமல வேலி ⋆
பொற்புடைய மலை அரையன் பணிய நின்ற ⋆
பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே ! ॥ **7** ॥

பொங்கார் மெல் இளங்கொங்கை பொன்னே பூப்பப் ⋆
பொரு கயல் கண் நீர் அரும்பப் போந்து நின்று ⋆
செங்கால மடப் புறவம் பெடைக்குப் பேசும் ⋆
சிறு குரலுக்குடல் உருகிச் சிந்தித்து ⋆
ஆங்கே தண் காலும் தண் குடந்தை நகரும் பாடித் ⋆
தண் கோவலூர் பாடி ஆடக் கேட்டு ⋆
நங்காய் ! நம் குடிக்கிதுவோ நன்மை என்ன ⋆
நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே ! ॥ **17** ॥

## பொய்கையாழ்வார் அருளிச்செய்த – முதல் திருவந்தாதி

வேங்கடமும் ⋆
விண்ணகரும் வெஃகாவும் ⋆
அஃகாத பூங்கிடங்கின் ⋆

நீள் கோவல் பொன் நகரும் ⋆
நான்கிடத்தும் நின்றான் இருந்தான் ⋆
கிடந்தான் நடந்தானே ⋆
என்றால் கெடுமாம் இடர் ‖ **77** ‖

நீயும் திருமகளும் ⋆
நின்றாயால் ⋆
குன்றெடுத்துப் பாயும் ⋆
பனி மறைத்த பண்பாளா ⋆
வாசல் கடை கழியா உள் புகாக் ⋆
காமர் பூங்கோவல் ⋆
இடை கழியே பற்றி இனி ‖ **86** ‖

## பூதத்தாழ்வார் அருளிச்செய்த – இரண்டாம் திருவந்தாதி

தமர் உள்ளம் தஞ்சை ⋆
தலை அரங்கம் தண் கால் ⋆
தமர் உள்ளும் தண் பொருப்பு வேலை ⋆
தமர் உள்ளும் மாமல்லை கோவல் ⋆
மதிட்குடந்தை என்பரே ⋆
ஏவல்ல எந்தைக் கிடம் ‖ **70** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

மற்றெனக்கிங்
காரானும் கற்பிப்பார் நாயகரே ⋆
நான் அவனைக் காரார் திருமேனி காணும் அளவும் போய் ⋆
‡ சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே ⋆
மதிட்கச்சி ஊரகமே பேரகமே ⋆

பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே ⋆
பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர் ⋆
‡ ஆராமம் சூழ்ந்த அரங்கம் ‖ **36** ‖

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

கோவலூர்
மன்னும் இடைகழி எம் மாயவனை ⋆
பேய் அலறப் பின்னும் முலை உண்ட பிள்ளையை ‖ **66** ‖

**திரு பூங்கோவல் நாச்சியார் சமேத த்ரிவிக்ரமன் திருவடிகளே சரணம்**